*கவனிக்க.- 26.07.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* II *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1822 - 2013 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2013.08.02

*1822 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1728 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1733 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** *(i) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2013, யூன் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(ii) அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூலை மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(iii) முதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூலை மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2013, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## கம்பஹா மாநகர சபை

*மேல் மாகாண அரச சேவையில் தீயணைப்புப் படை வீரர் பதவிக்கு ஆட்சேர்த்தல்*

*மேல் மாகாண அரச சேவையில் கம்பஹா மாநகர சபையில் வெற்றிடமாகவுள்ள தீயணைப்புச் சேவை தீயணைப்பு படை வீரர் பதவிக்கு இந்த அறிவித்தலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவர்களிடம் (ஆண்) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1.* ***சம்பள அளவுத் திட்டம்.***- *ரூபா 14,280 - 145 x 7 - 180 x 10 - 240 x 17 - ரூபா 21,175 (ஆர்எஸ்-1-2006ஏ)*

*2.* ***வயதெல்லை.***- *19 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். தேசிய பயிலுநர் சபையினால் நடாத்தப்படுகின்ற தீயணைப்புப் படை வீரர் பாடநெறியைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளின் வயதெல்லை முதன் முறையாக 35 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*3.* ***கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.***- *(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம், தமிழ், கணிதம், விஞ்ஞானம் என்பன உள்ளிட்ட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் அவற்றில் 5 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்கவும் வேண்டும்.*

*(ஆ) உயர்ந்த ஒழுக்கமும் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.*

*அத்துடன்*

(i) *குறைந்தது 5 அடி 4 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.*

(ii) *குறைந்தது 125 இறாத்தல் (55.5 கி. கி.) உடற்பாரம் உடையவராக இருத்தல் வேண்டும்.*

(iii) *விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.*

(iv) *மேல் மாகாணத்துக்குள் குறைந்தது 3 வருடகாலம் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.*

*4.* ***ஆட்சேர்ப்பு முறை.***- *பொது நிருவாக சுற்றறிக்கை 15/90 இற்கு இணங்க எழுத்துப் பரீட்சையும் தகைமைகாண் பரீட்சையும் நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆட்சேர்ப்புப் பணி கம்பஹா மாநகர ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும்.*

*ஆட்சேர்ப்புக்கான பரீட்சை.- (அ) பொது அறிவைப் பரிசோதிப்பதற்கான ஒரு மணித்தியாலத்தைக் கொண்ட வினாப்பத்திரம் ஒன்றுக்கு தோற்ற வேண்டும்.*

*(ஆ) உடற் தகைமையைப் பரிசோதிப்பதற்கான தகைமைகாண் பரீட்சை உரிய காலத்தில் நடாத்தப்படும்.*

*5.* ***சேவையில் வைத்திருப்பதற்கான நிபந்தனைகள்.***- (i) *இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது.* (ii) *தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், மேல் மாகாணத்தின் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் பிறப்பிக்கப்படும் வேறு நிபந்தனைகளுக்கும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் கட்டளைகளுக்கும் இணங்க நடத்தல் வேண்டும். இந்தப் பதவியின் சேவை மேல் மாகாணத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும்.*

*6.* ***சேவை நிபந்தனைகள்.***- *தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் முதலில் தீயணைப்புச் சேவை திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற ஒரு வருட பயிற்சிப் பாடநெறியொன்றைப் பயில வேண்டும்.*

*பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 3,000 வழங்கப்படும்.*

*பயிற்சிக் காலத்தில் திருப்தியளிக்காத வேலை மற்றும் நடத்தையைக் கொண்டிராத அல்லது எதிர்பார்க்கப்படும் தொழில் தரத்தை அடைய முடியாத பயிலுநர்களை எதுவித நட்டஈடும் இன்றி பயிற்சியில் இருந்து நீக்கும் அதிகாரம் நியமிக்கும் அதிகாரிக்கு உண்டு.*

*பயிற்சியை நிறைவுசெய்கின்ற பயிலுநர்கள் 5 வருட காலம் மேல் மாகாண அரச சேவையில் சேவை செய்வதாக ரூபா 10,000 பெறுமதியான உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டும்.*

*பயிற்சியை ஆரம்பிக்க முன்னர் அனைத்து பயிலுநர்களுக்கும் வைத்திய பரிசோதனைக்கு தோற்ற வேண்டும்.*

தீயணைப்பு படை வீரராக நியமனம் கிடைத்தால், அவ்வாறு நியமனம் பெறுபவர்கள் உரிய உள்ளூராட்சி மன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வசிப்பது கட்டாயமானதாகும்.

7. **வினைத்திறன்காண் தடைதாண்டல்**.- கம்பஹா மாநகர ஆணையாளரினால் பெயர் குறிக்கப்படும் நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், நியமனத்துக்குப் பொறுப்பான அதிகாரியினால் வினைத்திறன் தடைதாண்டலுக்கு அப்பால் பதவி உயர்த்தப்படுவர்.

எழுத்துமூலப் பரீட்சை.- தீயணைப்பு விஞ்ஞானம் - இரண்டு மணித்தியால வினாப்பத்திரம் ஒன்று.

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இங்கு தரப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.08.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "மாநகர ஆணையாளர், மாநகர சபை, கம்பஹா" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மேல் மாகாண அரச சேவையில் தீயணைப்புப் படை வீரர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்களும் ஏனையவைகளும் ;
(iii) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தை சான்றிதழ்கள்.

கே. எம். டபிள்யூ. பிரேமச்சந்திர,
மாநகர ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரச சேவையில் தீயணைப்புப் படை வீரர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2013**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
4. பால் (ஆண்/பெண்) :----.
5. பிறந்த திகதி :
   வருடம் :----, மாதம் :----, திகதி :----.
6. இலங்கைப் பிரசாவுரிமை பிறப்பின் மூலம் கிடைத்ததா ? பதிவின் மூலம் கிடைத்ததா ? :----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
8. கல்வித் தகைமைகள் :
   (i) க. பொ. த. (சா. த.) பரீட்சை-
   முதலாவது தடவை சித்தியடைந்த வருடம் :----.
   பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

இரண்டாவது தடவை சித்தியடைந்த வருடம் :----.
பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) வேறு தகைமைகள் :----.

9. தொழிற் தகைமைகள் :----.

10. சேவை அனுபவம் :----.

(1) தற்போது பணியாற்றும் நிறுவனம் :----.
(2) தற்போது வகிக்கும் பதவி :----.
(3) அந்தப் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(4) முன்னர் சேவையாற்றிய நிறுவனத்தில் வகித்த பதவி :----.

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் சரியானவை என உறுதி கூறுகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு இணங்க நான் ஏதாவது போலியான தகவல்களை முன்வைத்திருந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது விண்ணப்பத்தை நிராகரிக்க முடியும் என்றும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறு தெரியவந்தால் சேவையைவிட்டு நீக்கவும் முடியும் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8-51

---

## மஹர பிரதேச சபை

1. மேல் மாகாண அரசாங்க சேவையில் மஹர பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக மேல் மாகாணத்தில் வதியும் தகுதிபெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவு (மாதாந்தம்) | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சுகாதார ஊழியர் | 01 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (P.L.1-2006 A) | கல்வித் தகைமைகள் கவனிக்கப்பட மாட்டாது. |
| 02 | வேலை/ வெளிக்கள ஊழியர் | 04 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (P.L.1-2006 A) | 5 ஆம் தரம்/6 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 03 | சாரதி | 02 | ரூபா 12,470 -10×130 -10×145 - 10×160- 12 ×170 - ரூபா18,860 (P.L.3-2006 A) | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் மற்றும் வாகனச் சாரதியாக 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) ஆகக்குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். சிறந்த கண் பார்வை இருத்தல் வேண்டும். நெடுஞ்சாலை சட்ட விதிக் கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |
| 04 | தகனம் செய்யுமிட இயக்குனர் | 01 | ரூபா 12,210 -10×130 -10×145 - 10×160- 12 ×170 - ரூபா 18,600 (P.L.2-2006 A) | க. பொ. த. (சா. த.)/தே. பொ. க. சா. பரீட்சையில் ஏதேனும் 02 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் ஆகக்குறைந்தது 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (அரசாங்கத்தின் பதிவுபெற்ற நிறுவனமொன்றில்) |

**ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்.-**

(1) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
(2) விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த 3 ஆண்டு காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 18 வருடங்களுக்குக் குறையாமலும் மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியர் சம்பந்தமாக உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)
(4) விண்ணப்பதாரர் சிறந்த தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
(5) தண்ட சட்ட விதிக்கோவையின்கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டவராக அல்லது அரசாங்க, மாகாண சபை சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக இல்லாதிருத்தல் வேண்டும்.
(6) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தவோ அல்லது மாற்றங்கள் செய்யவோ அல்லது இந்த அறிவித்தலை இரத்துச்செய்யவோ, திருத்தம் செய்யவோ மஹர பிரதேச சபையின் செயலாளருக்கு உரிமை உண்டு.

**சேவையில் இருத்துவதற்கான நிபந்தனைகள்.-**

(1) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டதாகும்.
(2) மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.
(3) விதவை/தபுதாரர் அனாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
(4) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக இலங்கைக் குடியரசின் கட்டளைகளுக்கும், மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது மஹர பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்.-** இந்த அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் 12" × 8" அளவிலான விண்ணப்பப்படிவம் தயாரித்து விண்ணப்பிக்கும் பதவி உரித்துடைய கடித உறையின் இடதுபக்கத்தில் எழுதி 2013.08.30 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன, கடவத்தை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களைச் சேவைத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.) உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படுதல் வேண்டும்** :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப்பத்திரம் ;
(6) ஏனைய தகைமைகள் காண்பிக்கும் சான்றிதழ்கள் ;
(7) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

எஸ். ஏ. கே. என். இந்திரஜித்,
செயலாளர்,
மஹர பிரதேச சபை.

மஹர பிரதேச சபை,
பஹல கரகஹமுன,
கடவத்தை,
2013.07.15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மஹர பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில் ................................................................ பதவிக்கான ஆட்சேர்ப்பு

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்துக்களினால் உள்ள பெயர்கள் :----.
2. நிரந்தர வதிவு மாவட்டம் :----.

3. நிரந்தர முகவரி :----.

4. பால் (ஆண்/பெண்) :----.

5. பிறந்த திகதி :

2013.08.30 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. இலங்கைப் பிரசையானது பிறப்பினாலா அல்லது பதிவு மூலமா ? :----.

8. (i) கல்வித் தகைமைகள் :

| விடயம் | சித்தி | விடயம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) ஏனைய தகைமைகள் :

9.தொழில் ரீதியான தகைமைகள் :----.

10.சேவை அனுபவம் :----.

(i) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(iii) அந்தப் பதவியில் சேவைக் காலம் :----.

(iv) முன்னர் சேவை செய்த இடம் மற்றும் சேவைக்காலம் :----.

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு சம்பந்தமான நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் பிழையான தகவல்கள் தரப்பட்டுள்ளதாக நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அல்லது பின்னர் தெரியவந்தால் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./ திருமதி/ செல்வி ............................................................ இந்த அலுவலகத்தில் ........................................................................ ஆகச் சேவையாற்றுகிறார். விண்ணப்பப்படிவம் சிபாரிசு செய்து சமர்ப்பிக்கப்படுகின்றது/சிபாரிசு செய்யப்படவில்லை.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

8-98

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கலிகமுவ பிரதேச சபை

*நிறைவேற்றப்பட்ட துணைச் சட்டம்*

*261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட துணைச்சட்ட) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் முதலாம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப கலிகமுவ பிரதேச சபையினால் 2012.02.12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 05-1 ஆம் இலக்க பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.*

*எச். பீ. கெலும் நிசாந்த பதிரண,*
*தவிசாளர்,*
*கலிகமுவ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கலிகமுவ.*
*2013.03.19.*

**அட்டவணை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்கவேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமைப்புக்கள் (நிறைவேற்றப்பட்ட துணைச்சட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் சபரகமுவ மாகாண மாகாண சபையில் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்ட 2011.01.28 ஆந் திகதிய 1691 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்மானப் பத்திரிகையில் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட சபரகமுவ மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டதாக 2012.03.30 ஆந் திகதிய 1752 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்டதுமான சபரகமுவ மாகாணத்தின் கலிகமுவ பிரதேச சபை அதிகார எல்லையில் நுளம்புகள் மற்றும் நோய் தொற்றக்கூடிய கிருமிகளை அழித்தல் சம்பந்தமான நகல் துணைச்சட்டத்தினை, இப்பிரேரணை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினம் முதல் நடைமுறைப்படுத்துவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும் மேலே கூறப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட துணைச்சட்டம்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின்கீழ் கலிகமுவ பிரதேச சபை முன்மொழிகின்றது.*

*8-46*

---

## *1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியின் 5(I) இன்கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் உறுப்புரையின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியின் 5(I) இன்கீழ் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் முதல் அமைச்சரும் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருமான அதுல சரத்குமார விஜேசிங்ஹ ஆகிய என்னால் வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்ட வாரியபொல பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மயானங்கள், சவங்களைப் புதைக்கின்ற அல்லது தகனம் செய்வதற்கான பொது மயானங்களாக இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*சட்டத்தரணி அதுல சரத் குமார விஜேசிங்ஹ,*
*முதல் அமைச்சரும் மாகாண சபையின்*
*உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்,*
*வடமேல் மாகாண சபை.*

*முதல் அமைச்சர் அலுவலகம்,*
*குருநாகல்.*
*2013, மே 23.*

**வாரியபொல பிரதேச சபை**

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியின் 5(I) இன்கீழ் வெவ உட மயானத்தை பிரகடனப்படுத்தல்*

*வாரியபொல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் எம்பவ என்ற கிராமத்தில் க. கி. ப. 2522 ஆம் இலக்க வரைபடத்தில் 18/53 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெவ உட மயானம் என்ற 5 ஆம் இலக்க காணி–*

***அட்டவணை***

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : | வாரியபொல |
| கிராமசேவகர் பிரிவு | : | 1241 எம்பவ |
| கிராமம் | : | எம்பவ |
| காணியின் பெயர் | : | வெவ உட மயானம் |

எல்லைகள் :

வடக்கு : 4 ஆம் இலக்க காணித்துண்டு
கிழக்கு : 6 மற்றும் 7 ஆம் இலக்க காணித்துண்டுகள்
தெற்கு : க. கி. ப. 2523 ஆம் இலக்க தலபொத கிராம எல்லையும்
மேற்கு : க. கி. ப. 2523 ஆம் இலக்க தலுபொத கிராம எல்லைக்கு உரித்தாகும் எல்லை அளவு

என்ற எல்லைக்குள் உட்பட்ட 0.339 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணி ; (0ஏ. 3றூ. 14பே.).

**வாரியபொல பிரதேச சபை**

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியின் 5(I) இன்கீழ் ஹிரிகொல்ல கெரகோப்புவ மயானத்தை பிரகடனப்படுத்தல்*

*வாரியபொல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நேடிய என்ற கிராமத்தில் க. கி. ப. 89 ஆம் இலக்க வரைபடத்தில் 18/31 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹிரிகொல்ல கெரகோப்புவ மயானம் என்ற 109 ஆம் இலக்க காணி–*

***அட்டவணை***

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : | வாரியபொல |
| கிராமசேவகர் பிரிவு | : | 1251 நேடிய |
| கிராமம் | : | நேடிய |
| காணியின் பெயர் | : | ஹிரிகொல்ல கெரகோப்புவ |

எல்லைகள் :

வடக்கு : 108, 104 மற்றும் 107 ஆம் இலக்க காணித்துண்டுகள்
கிழக்கு : 107, 111 ஆம் இலக்க காணித்துண்டுகளும் மற்றும் க. கி. ப. 2502 பலலவாகாரய கிராம எல்லையும்
தெற்கு : 110 ஆம் இலக்க காணித்துண்டும் வேஉடவில்லி ஹத்பத்தவெஹி கிராம எல்லையும்
மேற்கு : வேஉடவில்லி ஹத்பத்தவெஹி எல்லைக்கு உரித்தாகும் எல்லை அளவு

என்ற எல்லைக்குள் உட்பட்ட 0.602 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணி ; (1ஏ. 1றூ. 38பே.).

**வாரியபொல பிரதேச சபை**

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியின் 5(I) இதன்கீழ் மினுவங்கெட மயானத்தை பிரகடனப்படுத்தல்*

*வாரியபொல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மினுவங்கெட என்ற கிராமத்தில் க. கி. ப. 2488 ஆம் இலக்க வரைபடத்தில் 18/54 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மினுவங்கெட மயானம் என்ற 97 ஆம் இலக்க காணி–*

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : | வாரியபொல |
| கிராமசேவகர் பிரிவு | : | 1253 மினுவங்கெட |
| கிராமம் | : | மினுவங்கெட |
| காணியின் பெயர் | : | மினுவங்கெட மயானம் |

எல்லைகள் :

வடக்கு : 74 மற்றும் 218 ஆம் இலக்க காணித்துண்டுகள்
கிழக்கு : 74 ஆம் இலக்க காணித்துண்டும் க. கி. ப. 2491 கோரலேகம கிராம எல்லையும்
தெற்கு : 218 ஆம் இலக்க காணித்துண்டும் க. கி. ப. 2491 கோரலேகம கிராம எல்லையும்
மேற்கு : 217 ஆம் இலக்க காணித்துண்டு

என்ற எல்லைக்குள் உட்பட்ட 0.435 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணி ; (1ஏ. 0றூ. 12பே.).

**வாரியபொல பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியின் 5(I) இன்கீழ் கினிபென்தேகம மயானத்தை பிரகடனப்படுத்தல்

வாரியபொல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கினிபென்தேகம என்ற கிராமத்தில் க. கி. ப. 2681 ஆம் இலக்க வரைபடத்தில் 18/44 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கினிபென்தேகம மயானம் என்ற 02 ஆம் இலக்க காணி-

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : | வாரியபொல |
| கிராமசேவகர் பிரிவு | : | 1246 கினிபென்தேகம |
| கிராமம் | : | கினிபென்தேகம |
| காணியின் பெயர் | : | கினிபென்தேகம மயானம் |

எல்லைகள் :

வடக்கு : க. கி. ப. 2677 ஆம் இலக்க கலவான்னேகம கிராம எல்லை
கிழக்கு : 81 ஆம் மற்றும் 3 ஆம் இலக்க காணித்துண்டுகள்
தெற்கு : 70 ஆம் இலக்க காணித்துண்டு
மேற்கு : 70 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் க. கி. ப. 2677 கலவானேகம கிராம எல்லையும்

என்ற எல்லைக்குள் உட்பட்ட 0.137 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணி ; (0ஏ. 1றூ. 14பே.).

8-47

---

**எல்ல பிரதேச சபை**

கொசுக்கள் மற்றும் நோய் பரப்பும் கிருமிகளை அழித்தொழிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளை ஏற்றுக்கொள்ளுதல்

எல்ல பிரதேச சபையின் 2013.06.27 ஆந் திகதிய அமர்வின்போது பிரேரணை இலக்கம் 03-03 இன்கீழ் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

எச். எம். சுனில் காமினி,
தலைவர்,
எல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எல்ல,
2013.07.01.

**பிரேரணை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவோடு வாசிக்கவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1678/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 2010.11.02 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்கள் மற்றும் நோய் பரப்பும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள் என்பதாகும்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவோடு வாசிக்கவேண்டியதும் அந்தச் சட்டத்தின் 93 ஆம் பிரிவினதும் 126 ஆம் பிரிவின் 9 ஆம் உப பிரிவின்படி தனக்குரித்தாக்கப்பட்ட உரிமங்களின்படி எல்ல பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களின் நடைமுறைப்படுத்தவேண்டிய துணைவிதி என இந்தப் பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்த மேற்கூறிய உள்ளூராட்சி மன்ற (துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்படி எல்லா பிரதேச சபை பிரேரிக்கின்றது.*

*இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின் பொருள் கோடல் செய்யும்போது துணைவிதிகளில் குறிப்பிட்ட சபை, தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பகுதி என்ற சொற்கள் மூலமாக எல்ல பிரதேச சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பிரதேசம் என்பது பொருளாகும்.*

*8-116/1*

---

**எல்ல பிரதேச சபை**

கடின கழிவுப்பொருட்கள் தொடர்பான தகுதியான துணைச்சட்ட விதிகள்

*எல்ல பிரதேச சபையின் 2013.06.27 ஆந் திகதிய அமர்வின்போது பிரேரணை இலக்கம் 02-03 இன்கீழ் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

எச். எம். சுனில் காமினி,
*தலைவர்,*
எல்ல பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*எல்ல,*
*2013.07.01.*

**பிரேரணை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியோடு வாசிக்கவேண்டிய 261 ஆம் இலக்க அதிகாரத்தினதான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (தகுதியான துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்படி ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டதும் 2012.10.05 ஆந் திகதிய 1778/45 ஆம் இலக்க இலங்கை பிரதேச சபை கடின கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான தகுதியான துணை விதிகள்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவோடு வாசிக்கவேண்டியதும் அந்தச் சட்டத்தின் 93 ஆம் பிரிவினோடுகூடிய 126 ஆம் இலக்கப் பிரிவின் 9 ஆம் உப பிரிவின்படி உரித்தாக்கப்பட்ட உரிமங்களின்படி ஏற்று நடைமுறைப்படுத்தவும், இந்த துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் நடைமுறைப்படுத்தவும், இந்த துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்தவும் ஏற்றுக்கொள்ளவும் மேற்படி உள்ளூராட்சி (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் எல்ல பிரதேச சபை பிரேரணை ஒன்றினைப் பிரேரிக்கின்றது.*

*இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின் பொருள் கோடல் செய்யும்போது துணைவிதிகளில் குறிப்பிட்ட சபை, தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பகுதி என்ற சொற்கள் மூலமாக எல்ல பிரதேச சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பிரதேசம் என்பது பொருளாகும்.*

*8-116/2*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2013***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2013 |
| | | வியாழன் | 08.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2013 |
| | | வெள்ளி | 16.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2013 |
| | | வெள்ளி | 23.08.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 08.08.2013 |
| | | வெள்ளி | 30.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2013 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2013 |
| | | வெள்ளி | 13.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2013 |
| | | வெள்ளி | 20.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2013 |
| | | வெள்ளி | 27.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2013 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2013 |
| | | வெள்ளி | 11.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2013 |
| | | வியாழன் | 17.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2013 |
| | | வெள்ளி | 25.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.